பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
06 08 2024 **TUESDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பங்களாதேஷில் திருமதி. ஷேக் ஹசீனா அரசு பதவியிழந்துள்ள நிலையில், அங்கு நிலவும் சூழல் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதித்தார்.
- நாட்டின் முதலாவது பன்னாட்டு விமானப்படை பயிற்சி கோவை மாவட்டம், சூலூரில் இன்று தொடங்குகிறது.
- தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளத்திலிருந்து கடலுக்குச் சென்ற 22 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து, இரண்டு படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.
- சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், எண்ணூர் முதல் மாமல்லபுரம் வரை அமைக்கப்பட்டு வரும் ஆறுவழிச் சாலை திட்டப் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.
- ஒலிம்பிக் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

>>>><<<<

பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பங்களாதேஷில் நிலவிவரும் சூழ்நிலை குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதற்கிடையே, பங்களாதேஷில் விரைவில் இடைக்கால அரசு அமைக்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு. மொஹமத் ஷஹாபுதீன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அந்நாட்டு முப்படையினர் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடன், அவர் நேற்று ஆலோசனை நடத்தினார்.

முன்னாள் பிரதமரும், பங்களாதேஷ் தேசிய கட்சித் தலைவருமான திருமதி. கலிதா ஜியா-வை வீட்டுச் சிறையிலிருந்து விடுவிப்பது என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்ட அனைத்து மாணவர்களையும் விடுவிக்குமாறும் திரு. ஷஹாபுதீன் அறிவுறுத்தியுள்ளார்.

முன்னதாக, போராட்டம் காரணமாக திருமதி. ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை ராஜினாமா செய்த பின், அந்நாட்டைவிட்டு வெளியேறினார்.

இந்நிலையில், இந்திய – பங்களாதேஷ் எல்லைப்பகுதியில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், அங்கு இயல்பு நிலை நிலவி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, இந்தியா – பங்களாதேஷ் இடையே இருமார்க்கங்களிலும் விமான சேவையை ஏர்-இண்டியா ரத்து செய்துள்ளது.

**>>>><<<<**

நாட்டின் முதலாவது பன்னாட்டு விமானப்படை பயிற்சி கோவை மாவட்டம், சூலூரில் இன்று தொடங்குகிறது.

**TARANG SHAKTI** என்ற பெயரில் நடைபெறும் இப்பயிற்சியில், 30 நாடுகள் பங்கேற்கின்றன. அவற்றில் 10 நாடுகள் தங்களுடைய போர் விமானங்களுடன் ஈடுபடுகின்றன.

இதுகுறித்து புதுதில்லியில் செயதியாளர்களிடம் பேசிய விமானப்படையின் துணைத்தளபதி ஏர்மார்ஷல் ஏ.பி. சிங், இரண்டு கட்டங்களாக இப்பயிற்சி நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

முதல்கட்டமாக சூலூரில் இன்று தொடங்கி, 14ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாவும், இரண்டாம் கட்டமாக ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் இம்மாதம் 29ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 14ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக அவர் கூறினார்.

ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், ஸ்பெயின், ஐக்கிய அரபு எமிரேட், இங்கிலாந்து, அமெரிக்கா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் விமானப்படை இந்த பயிற்சியில் பங்கேற்கவுள்ளதாகவும், 18 நாடுகள் பார்வையாளர்களாக கலந்து கொள்ளவுள்ளதாகவும் ஏர்மார்ஷல் ஏ.பி. சிங் தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில் 2030ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியை அடையும் வகையில், தொழில் மற்றும் வர்த்தகத்துறை சிறப்பாக செயலாற்றி வருகிறது என்று அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார்.

புதிய சிப்காட் தொழிற்பூங்காக்கள் அமைத்தல், தொழில் முதலீடுகள் தொடர்பாக நேற்று அவர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கான உரிய இடங்களை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் சிப்காட் வளாகங்கள் இல்லாத மாவட்டங்களில் புதிதாக சிப்காட் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. டி.ஆர்.பி. ராஜா கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

பள்ளிக் கல்வித்துறையின் வளர்ச்சிக்கு மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக சிறுபான்மை நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி மேல்மலையனூர் தாலுகாவில் உள்ள 29 அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 3 ஆயிரத்து 378 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இடைநிற்றல் பள்ளி மாணவர்களை கண்டறிந்து அவர்களை மீண்டும் பள்ளிக்கு வருவதற்கான முன்னெடுப்புகளை தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. செஞ்சி மஸ்தான் அறிவுறுத்தினார்.

>>>><<<<

தமிழகத்தில் நிலச்சரிவு போன்ற பேரிடர் சம்பவம் நடைபெறாமல் இருப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

கோவையில், யானை தாக்கியதில் காயமடைந்து, அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவரை சந்தித்து நிவாரணத் தொகை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நிலச்சரிவு நிகழ்ந்த வயநாடு பகுதியில் இயல்புநிலை திரும்பிய பிறகு, தமிழகத்திலிருந்து தொழில்நுட்பத்துறை அதிகாரிகள் அங்கு செல்லவுள்ளதாக கூறினார்.

அப்போது, இந்த நிலச்சரிவு எதனால் ஏற்பட்டது என்பது குறித்து அவர்கள் ஆராயவுள்ளதாகவும் திரு. முத்துசாமி குறிப்பிட்டார்.

>>>><<<<

மயிலாடுதுறை மாவட்டம், முதலைமேடு திட்டு மற்றும் நாதல்படுகையில் புயல் பாதுகாப்பு மையம் அமைக்கப்படும் என்று மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

மேட்டூரிலிருந்து திறக்கப்பட்ட உபரி நீர் காரணமாக, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பாதிக்கப்பட்ட கொள்ளிடம் ஆற்றுப்பகுதி கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிய பின் செய்தியாளர்களிடம் பேசினார்.

(சவுண்ட் பைட் மெய்யநாதன் 48 செகண்டஸ்)

>>>><<<<

எண்ணூர் முதல் மாமல்லபுரம் வரையிலான ஆறுவழிச் சாலை திட்டப் பணிகளை மாநில அமைச்சர்கள் திரு. எ.வ. வேலு, திரு. உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

சென்னையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், சென்னை எல்லை சாலைத்திட்டம் என்ற பெயரில் எண்ணூர் துறைமுகம் முதல் மாமல்லபுரம் பூஞ்சேரி கிழக்கு கடற்கரை சாலை வரையில் இத்திட்டம் கடந்த 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

சுமார் 133 கிலோமீட்டர் தொலைவிற்கு இப்பகுதியில் ஆறுவழிச்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அடுத்த ஆண்டு இறுதிக்குள் இப்பணிகளை முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர்.

>>>><<<<

தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளத்திலிருந்து கடலுக்குச் சென்ற 22 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து, இரண்டு படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

கடந்த மாதம் 21ஆம் தேதி ஒரு படகில் 12 மீனவர்களும், 23ஆம் தேதி மற்றொரு படகில் 10 மீனவர்களும் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் அந்த மீனவர்களை எல்லை தாண்டியதாக கூறி, கைது செய்து மன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்து சென்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

இருவரிச் செய்திகள்

**Fiji** சென்றுள்ள குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, அந்நாட்டு அதிபர் மற்றும் பிரதமருடன் இன்று இருதரப்பு பேச்சு நடத்துகிறார்.

>>>><<<<

சிக்கிமில் நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட்டை அம்மாநில முதலமைச்சர் திரு. பிரேம் சிங் தமாங் நேற்று தாக்கல் செய்தார்.

>>>><<<<

கர்நாடகாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளுடன், 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சித்தராமையா உறுதி அளித்துள்ளார்.

>>>><<<<

திண்டுக்கல் மாவட்டம், நத்தம், விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி ஆகிய பகுதிகளில் உள்ள பள்ளிகளில் அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு மேற்கொண்டார்.

>>>><<<<

திருப்பூர் மாநகரில் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று காவல்துறை ஆணையராக பொறுப்பேற்றுக் கொண்ட லட்சுமி தெரிவித்துள்ளார்.

>>>><<<<

திருப்பத்தூரில் மாற்றுத் திறனாளிகளுக்கு 90 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. தர்பகராஜ் வழங்கினார்.

>>>><<<<

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 349 மனுக்கள் பெறப்பட்டது.

>>>><<<<

மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பெய்து வரும் கனமழையால், குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்து போக்குவரத்து துணை ஆணையர் ஜெயலட்சுமி தலைமையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா இன்று ஹாக்கி, தடகளம், டேபிள் டென்னிஸ், மல்யுத்தம் உள்ளிட்ட பிரிவுகளில் பங்கேற்கிறது.

ஹாக்கி அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா – ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 10.30-க்கு தொடங்குகிறது.

ஈட்டி எறிதல் பிரிவில் நீரஜ் சோப்ரா, கிஷோர் குமார் ஜனா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மகளிர் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் கிரண் பஹல் பங்கேற்கிறார்.

மகளிர் குத்துச்சண்டை 50 கிலோ எடைப்பிரிவின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் வினேஷ் போஹத், ஜப்பானின் **Susaki Yui-**யை எதிர்கொள்கிறார்.

ஆடவர் டேபிள் டென்னிஸ் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியா-சீனாவை எதிர்கொள்கிறது.

முன்னதாக நேற்று நடைபெற்ற மகளிர் மல்யுத்த பிரிவின் காலிறுதிப் போட்டியில் நிஷா தாஹியா, வடகொரிய வீராங்கனையிடம் தோல்வியடைந்தார்.

ஆடவர் 3 ஆயிரம் மீட்டர் **Steeplechase** பிரிவில் இந்திய வீரர் **Avinash Sable** இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>><<<<**